
# மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

பெப்புருவரி 2020
தொகுதி 02 வெளியீடு 02



## முக்கிய பண்புகள்

### மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்





2020 பெப்புருவரியில் வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 988 மில்லியனுக்கு 0.7 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) சிறிதளவில் அதிகரித்தன.

### மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்





2020 பெப்புருவரியில் வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,562 மில்லியனுக்கு 9.1 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தன.

### ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வளர்ச்சி வீதம் (%)




2020 முதல் இரண்டு மாத காலப்பகுதியில் ஏற்றுமதி வருவாய்கள் 1.3 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்த வேளையில் இறக்குமதிச் செலவினம் 6.8 சதவீதத்தினால் அதிகரித்தது.

### வர்த்தகப் பற்றாக்குறை (ஐ.அ.டொ. மில்)





வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2019 பெப்புருவரியின் ஐ.அ.டொலர் 451 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 பெப்புருவரியில் ஐ.அ.டொலர் 574 மில்லியனுக்கு விரிவடைந்தது.

## முக்கிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வகைகள் - (2020 சன - பெப்)


### ஏற்றுமதிகள் (ஐ.அ.டொ. மில்)

### இறக்குமதிகள் (ஐ.அ.டொ. மில்)




# ஏற்றுமதிச் செயலாற்றம்

### ஏற்றுமதிச் செயலாற்றம் (சன-பெப்)




### ஏற்றுமதி அளவுச் சுட்டெண் (சன-பெப்)





2020 முதல் இரண்டு மாத காலப்பகுதியில் வேளாண்மை மற்றும் கனிமப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கிடையிலும் கைத்தொழில் ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவுசெய்தது.


கைத்தொழில் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக 2020 முதல் இரண்டு மாத காலப்பகுதியில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் மேம்பட்டது.

## வேளாண்மை ஏற்றுமதிகள்


### வேளாண்மை ஏற்றுமதிகள்





### வேளாண்மை ஏற்றுமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதி சுட்டெண்கள்




### வேளாண்மை ஏற்றுமதிகளின் செயலாற்றம் (சன-பெப்)




### தேயிலை மற்றும் இறப்பர் விலைகள்*





* கொழும்பு ஏல விலைகளை அடிப்படையாகக் கொண்டது


2020 முதல் இரண்டு மாத காலப்பகுதியில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு, வாசனைத் திரவியங்கள், தேயிலை, கடலுணவு மற்றும் தெங்கு என்பனவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான தாழ்ந்தளவிலான வருவாய்களே பிரதான காரணமாகும். எனினும், சிறுவேளாண்மை உற்பத்திகள் மற்றும் இயற்கை இறப்பர் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் இக்காலப்பகுதியில் அதிகரித்தன.

## கைத்தொழில் ஏற்றுமதிகள்


### கைத்தொழில் ஏற்றுமதிகள்





### கைத்தொழில் ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### கைத்தொழில் ஏற்றுமதிகளின் செயலாற்றம் (சன-பெப்)





### நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருள்களின் ஏற்றுமதி விலைகள்





2020 முதல் இரண்டு மாத காலப்பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் சிறிதளவு வீழ்ச்சியடைந்தமைக்கு உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, தோல், போக்குவரத்துப் பொருட்கள் மற்றும் காலணிகள், இறப்பர் உற்பத்திகள், விலங்குத் தீனி மற்றும் மரம் மற்றும் கடதாசி உற்பத்திகளின் ஏற்றுமதிகளின் தாழ்ந்த செயலாற்றமே காரணமாகும். எனினும், இக்காலப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தமைக்கு நீர்க்கல எரிபொருட்களின் உயர்ந்தளவான விலைகளே பிரதான தூண்டுதலாக அமைந்தது.

## இறக்குமதிச் செயலாற்றம்

### இறக்குமதிச் செயலாற்றம் (சன-பெப்)





### இறக்குமதி அளவுச் சுட்டெண் (சன-பெப்)





2020இன் முதல் இரண்டு மாத காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்தமைக்கு இறக்குமதிகளின் அனைத்து முக்கிய வகைகளின் மீதும் உறப்பட்ட உயர்ந்தளவிலான செலவினமே காரணமாகும். அதேவேளை, அனைத்து முக்கிய வகைகளின் உயர் இறக்குமதி அளவுடன் அவதானத்திற்குட்பட்ட காலப்பகுதியில் இறக்குமதி அளவுச் சுட்டெண் மேம்பட்டது.

# நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி


### நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி





### நுகர்வுப் பொருட்களின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றம் (சன-பெப்)





### சீனி, தானியங்கள் மற்றும் பால்மாவின் சராசரி இறக்குமதி விலைகள்





2020இன் முதல் இரண்டு மாத காலப்பகுதியில் நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்குக் குறிப்பாகப் பாலுற்பத்திகள், காய்கறிகள் மற்றும் சீனி போன்ற உணவுப் பொருட்கள் மற்றும் தனியாள் வாகனங்கள் மற்றும் மருந்து மற்றும் மருந்தாக்கற் பொருட்கள் போன்ற உணவல்லா நுகர்வுப் பொருட்கள் போன்ற முக்கியமான வகைகளின் உயர்ந்தளவிலான இறக்குமதிகள் காரணமாக அமைந்தன. எவ்வாறாயினும், காலப்பகுதியில் கடலுணவு மற்றும் அழகுசாதனப் பொருட்கள் மற்றும் சவர்க்கார வகைகள் என்பன மீதான செலவினம் குறைவடைந்தன.

# இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள்


### இடைநிலைப் பொருட்கள் மீதான செலவினம்





### இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்



### இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிச் செயலாற்றம் (சன-பெப்)





### மசகெண்ணெய் மற்றும் வளமாக்கியின் இறக்குமதி விலைகள் (மாதாந்தச் சராசரிகள்)





2020இன் முதல் இரண்டு மாத காலப்பகுதியில் இடைநிலைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்குக் எரிபொருள், உணவுத் தயாரிப்புக்கள், இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் மற்றும் புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் போன்ற பொருட்களின் இறக்குமதிகள் மீதான அதிகரித்த செலவினமே பிரதான காரணமாகும். எவ்வாறாயினும், அடிப்படை உலோகங்கள், கோதுமை மற்றும் சோளம் மற்றும் வாகனங்கள் மற்றும் இயந்திரப் பாகங்கள் போன்ற பொருட்களின் மீதான செலவினம் குறைவடைந்தது.

## முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள்


### முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம்




### முதலீட்டுப் பொருட்கள் ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிச் செயலாற்றம் (சன-பெப்)




2020இன் முதல் இரண்டு மாத காலப்பகுதியில் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்கு கட்டட மூலப்பொருட்களின் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்த போதிலும் பிரதானமாகப் பொறிகள் மற்றும் கருவிகள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் மீதான உயர்ந்த இறக்குமதிகளே காரணமாகும்.

# வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்களின் தொகுப்பு

## ஏற்றுமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | 19-பெப் | 20-பெப் | ஆ-ஆ மாற்றம் (%) | சன - பெப் 2019 | சன - பெப் 2020 | ஆ-ஆ மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | | **207.8** | **195.1** | **-6.1** | **415.4** | **383.8** | **-7.6** |
| இதில் | தேயிலை | 110.6 | 107.8 | -2.5 | 221.4 | 207.5 | -6.2 |
| | தெங்கு | 27.3 | 26.2 | -4.3 | 53.0 | 50.7 | -4.4 |
| | வாசனைத்திரவியங்கள் | 28.6 | 18.7 | -34.7 | 56.4 | 38.1 | -32.4 |
| | கடலுணவு | 25.3 | 20.6 | -18.8 | 52.7 | 44.2 | -16.1 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | | **769.5** | **790.0** | **2.7** | **1,595.9** | **1,602.6** | **0.4** |
| இதில் | புடவைகள் மற்றும் ஆடைகள் | 465.6 | 468.1 | 0.5 | 941.5 | 942.2 | 0.1 |
| | இறப்பர் உற்பத்திகள் | 69.7 | 71.5 | 2.6 | 150.3 | 141.7 | -5.7 |
| | பெற்றோலிய உற்பத்திகள் | 38.6 | 57.8 | 50.0 | 76.0 | 140.6 | 84.9 |
| | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 35.5 | 36.6 | 3.1 | 88.6 | 72.1 | -18.6 |
| | பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் | 32.2 | 34.8 | 7.9 | 69.1 | 65.3 | -5.5 |
| | இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 27.1 | 21.3 | -21.3 | 51.2 | 46.0 | -10.1 |
| | தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள் | 10.6 | 7.3 | -30.5 | 23.7 | 12.9 | -45.5 |
| **கனிமம் மற்றும் ஏனைய ஏற்றுமதிகள்** | | **3.8** | **3.3** | **-13.3** | **7.9** | **6.9** | **-13.1** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | | **981.1** | **988.4** | **0.7** | **2,019.3** | **1,993.3** | **-1.3** |

## இறக்குமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | 19-பெப் | 20-பெப் | ஆ.ஆ. மாற்றம் (%) | சன - பெப் 2019 | சன - பெப் 2020 | ஆ.ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | | **259.9** | **327.3** | **25.9** | **560.4** | **699.0** | **24.7** |
| **உணவு மற்றும் குடிபானங்கள்** | | 85.7 | 135.8 | 58.5 | 196.9 | 283.4 | 43.9 |
| இதில் | அரிசி | 1.0 | 1.4 | 40.6 | 3.3 | 3.6 | 7.0 |
| | பால் மா | 4.8 | 26.4 | 445.9 | 21.6 | 61.0 | 183.0 |
| **உணவல்லா நுகர்வுப் பொருட்கள்** | | 174.2 | 191.4 | 9.9 | 363.5 | 415.7 | 14.3 |
| இதில் | தனியாள் வாகனங்கள் | 48.1 | 53.6 | 11.3 | 97.7 | 116.9 | 19.7 |
| **இடைநிலைப் பொருட்கள்** | | **831.0** | **911.5** | **9.7** | **1,787.1** | **1,846.0** | **3.3** |
| இதில் | எரிபொருள் | 281.8 | 418.7 | 48.6 | 610.8 | 710.6 | 16.3 |
| | புடவை மற்றும் புடவைப்பொருட்கள் | 212.2 | 182.0 | -14.2 | 474.7 | 482.8 | 1.7 |
| | வளமாக்கிகள் | 5.3 | 13.2 | 148.8 | 9.1 | 19.2 | 111.9 |
| | கோதுமை மற்றும் சோளம் | 26.7 | 8.4 | -68.5 | 41.2 | 17.3 | -58.0 |
| **முதலீட்டுப் பொருட்கள் மற்றும் ஏனையவை** | | **341.5** | **323.6** | **-5.2** | **740.3** | **752.7** | **1.7** |
| இதில் | பொறி மற்றும் சாதனம் | 193.9 | 183.5 | -5.4 | 425.1 | 442.1 | 4.0 |
| **மொத்த இறக்குமதிகள்** | | **1,432.4** | **1,562.3** | **9.1** | **3,087.9** | **3,297.7** | **6.8** |

## வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | 19-பெப் | 20-பெப் | ஆ.ஆ. மாற்றம் (%) | சன - பெப் 2019 | சன - பெப் 2020 | ஆ.ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **வர்த்தக நிலுவை** | -451.3 | -573.9 | - | -1,068.6 | -1,304.3 | - |

## வர்த்தகச் சுட்டெண்கள் மற்றும் வர்த்தக மாற்று விகிதம் (2010 = 100) (அ)

| விடயம் | 19-பெப் | 20-பெப் | ஆ.ஆ. மாற்றம் (%) | சன - பெப் 2019 | சன - பெப் 2020 | ஆ.ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதி** | | | | | | |
| பெறுமதிச் சுட்டெண் | 136.6 | 137.6 | 0.7 | 140.5 | 138.7 | -1.3 |
| அளவுச் சுட்டெண் | 127.3 | 133.9 | 5.2 | 136.8 | 142.2 | 4.0 |
| அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 107.3 | 102.8 | -4.2 | 102.8 | 97.6 | -5.1 |
| **இறக்குமதி** | | | | | | |
| பெறுமதிச் சுட்டெண் | 128.2 | 139.9 | 9.1 | 138.2 | 147.6 | 6.8 |
| அளவுச் சுட்டெண் | 143.2 | 157.5 | 10.0 | 152.2 | 165.3 | 8.6 |
| அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 89.5 | 88.8 | -0.8 | 90.8 | 89.3 | -1.6 |
| **வர்த்தக மாற்று விகிதம்** | 119.8 | 115.7 | -3.5 | 113.2 | 109.2 | -3.5 |

(அ) ஐ.அ.டொ. நியதிகளில்